ஓம்

விநாயகநம

# சந்திர தீபம்

தவத்தைப் பெருக்கவும், தர்மத்தைக் காக்கவும், சிவத்தைப் பேணவும், திருவருள் பூண்டது.

UNIVERSITY OF SRI LANKA ... PERIODICAL DIVISION ★ LIBRARY

இதழ் - 1 காலயுத்திவருஷம் ஆவணி மாதம் 2ம் திகதி வெள்ளிக்கிழமை [18-8-1978] சுடர் - 17

# இறைவனது அருள் செறிந்த இசையாவது தமிழ் வேதமாய தேவாரம்

## இவை கண்டத்தின் இனிமைக்கும் இசைக்கருவியின் அளவிற்கும் அமைவதான தோத்திரப் பாடல்கள் அன்று என்பதை வேதமாய தமிழ் பாடி நிரூபிக்கின்றார் எம்பெருமான் திருஞானசம்பந்தர்.

# பணமோ புகழோ இசையில் இருந்தால் அது தெய்வீகமாகாது

இசையில் பணமோ புகழோ இருந்தால் அது தெய்வீகமாகாது. அது முழுவதும் முழுவதும் ஏமாற்று. எமது மக்கள் இசைக் கலைஞருடைய புகழ்வலையில் சிக்கி பல பல ஆயிரக் கணக்கான ரூபாக்களை நேர்மை அற்ற முறையாக இசையாளருக்கு கொடுத்து அவரை தேவசந்நிதியில் கொண்டு வந்து வைத்து பாடுவித்து தம்மையும் ஏமாற்றி மக்களையும் ஏமாறச் செய்கின்ற சில நிகழ்ச்சிகள் சமீபகாலங்களில் இடம் பெற்றுள்ளன. அவைகள் யாவும் உண்மையாம் தெய்வநிலையை உணர்ந்து கொண்டோருக்கு பெரும் வேதனையைத்தருவதாகவும் அருவருக்கத்தக்க செயலாகவும் இருக்கின்றது. வேறெங்கு நடந்தாலும் பரவாயில்லை கடவுட் சந்நிதியில் இப்படியான செயல் நடைபெறல் நன்றல்ல. சில வியாபாரிகளுக்கும் வேறு சிலர்க்கும் கால நிலையால் பணம் தண்ணிப் பைப்பு வெடித்துப் பெருகுவதுபோல் வந்துள்ளது. அவர்கள் தம்பால் வரும் பணத்தை தரும விளக்கமின்றிச் செலவிடும் நிலையைப்பார்க்க வெட்கப்படவேண்டிவருகிறது.

தேவாரப் பதிகங்களின் உயர்வை பெரும் பாலும் நமது மக்கள் உணரவில்லை. தேவாரப்பதிகங்கள் தோன்றிய நாடான தென்இந்தியாவே தேவாரப்பதிகங்களின் உயர்வையும் அதன் அருள் நிலையையும் விளங்கிக்கொள்ளவில்லை என்பதை திருமுறைகளை நன்கு விளங்கினோர் ஏற்றுக்கொள்வர். அங்கு சில தோத்திரப்பாடலிற்கும் காமரசப் பாடலிற்கும் பிறகலைப்பாடல்களுக்குமே மதிப்பு கொடுக்கின்றார்கள். ஏனெனில் அங்கு இசைக்கலை ஓர் வியாபாரப் பொருளாக பணம் வசூலிக்கும் பொருளாக வந்து கொண்டது. மக்கள் விரும்புவதே பெருமை உடைய கலையாகக் கொள்கின்றனர்.

இந்தவகையால் நமது சிரமேற் கொண்டு போற்ற வேண்டிய தேவாரமும் வியாபாரத் துறையில் சிக்குப்பட்டு விளக்கமிலாத மக்களால் தோத்திரமாக கருதப்பட்டு வருகிறது. பணம்வாரிசுவாமிகளை பணத்திலும் புகழிலும் வாஞ்சை கொண்ட வாய்ப்பேச்சின் திறமை உடைய பேயராம் பேச்சாளர் கூச்சமின்றி நாயன்மார் வழி வந்த 64 வது பேர்வழி என்று பேசும் போது தென் இந்தியாவில் அருளின் பெருமை விளங்கினார் மிகக் குறைவு என்பது தெளிவு.

பட்டினத்தார் தாயுமானவர் முதலிய பெரியோர்களே 63 நாயன்மாரில் யார் செய்த தொண்டிற்கும் தாம் இணையாக மாட்டோம்என போற்றிப் புகழ்ந்திட: மேடை கிடைத்தால் அதில்நின்று சைவத்தின் சீலங்களை புனிதத்தை நன்கு விளங்காது பேசுவதால் அருள் ஒளி வழர்த்த நாடு இருளைப் பெருக்கப் போகின்றது என்னும் ஆபத்து வருகின்றது. எமது உண்மையான வார்த்தையை தென்இந்திய சைவப் பெருமக்களும் இலங்கை வாழ் சைவப் பெருமக்களும் தவறாக அல்லது சிறுமை உடைத்தாக அல்லது மனக்குரோதத்து எழுந்த ஒரு வார்த்தையாக எண்ணாது உண்மையை உணர முற்படுங்கள். எமது சைவ நீதியில் புண்ணியம் பெரிதாவதே ஒழிய புகழும் பொருளும் பெரிதாவதன்று. கந்தபுராணத்து தக்ஷகாண்ட மூலம் இதனைத் தெளியுங்கள்.

தெய்வ இசை கண்டத்தின் இனிமையாலும் இசைக்கருவியின் இனிமையாலும் அளக்கமுடியாது என்பதனை எம் மக்கள் யாவரும் உணரும் படி யாகவும்; கோவிலில் நடைமுறைகளை நன்கு விளங்கிக் கொள்ளாத திருப்பணிச்சபையார் உணர்ந்து திருந்தும் படியாகவும்; இன்றைய மக்கள்விரும்பும் பல தரப்பட்ட பொருள் வியாபாரத்தால் ஈட்டிய பொருள் கொண்டு தம்மை விளம்பரம் செய்யும் பெரியோர் உணரும் படியாகவும் திருஞானசம்பந்தப் பெருமான் பாடியருளிய பதிகம் ஒன்று கீழே தருகின்றோம். இப்பதிகத்தின் வரலாறும் இசையின் தூய்மை பற்றிய விளக்கமும் இப்பாடலின் முடிவில்தரப்பட்டுள்ளது. இதன் விரிவைஅதில் காண்க.

மாதர்ம டப்பிடியும் மட அன்னமும் அன்னதோர்
  நடை யுடைம் மலை மகள் துணையென மகிழ்வர்
பூதஇ னப்படைநின் றிசைபாடவும் ஆடுவர்
  அவர் படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
  யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னைதயங் கும லர்ச்சிறை வண்டறை
  யெழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே.

அழகுடைய மடம் பொருந்திய பெண்யானையும் மடம் எனும் குணம் உடைய அன்னமும் ஒத்ததொரு நடை உடைய மலைமகள் உமையம்மையாரைத் துணையெனக்கொண்டு மகிழ்கின்ற பெருமான். பூதங்களின் இனமாய் பெரும்படை நின்று இசைபாடவும் ஆடியருளும் பெருமான். அவர் படரும் சடை யான நெடு முடிமீது கங்கை நீரை அணிந்தவர். வேதங்களுடன் ஏழு இசைகளும் பாடுவர். அவர் ஆழ்ந்தகடலில் எழுந்த வெண்மை நிறமுடைய திரை இரைந்து வந்து கரையில் மோதி விம்மி எழுந்து புரள அதன் அயலாக தேன்துளிக்கும் புன்னை மரம்மீது விளங்கும் பூக்களில் சிறகுடைய வண்டுகள் மொய்த்துப் பாடும் அழகுடைய சோலையில் குயில்கள் பயில்கின்ற தருமபுரம் எனும் பதியை இருப்பிடமாகக் கொண்டவர். 1 (மு ப பா.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்குந டைப்புகலில் விடை யாமவர் ஊர்திவெண்
பொடி யணி தடங் கொள்மார் புபூணநூல் புரள
மங்குலி டைத் தவழும் மதி சூடுவர் ஆடுவர்
வளங் கிளர் புனல் அர வம்வைகிய சடையர்
சங்குக டல்திரையால் உதை யுண்டுச ரிந்திரிந்
தொசிந் தசைந் திசைந் துசே ரும்வெண் மணற் குமைமேல்
தங்குக திர்ம்மணிநித் திலம் எல்லிருள் ஓல்கநின்
றிலங் கொளிந் நலங் கெழில் தருமபு ரம்பதியே.

பொங்கும் நடை உடைய நிகரிலாத இடபமாம் அவர் வாகனம். வெண்பொடி அணிந்த விசாலித்த அவரது நெஞ்சில் பூநூல் புரண்டிட; மேகத்திடைத்தவழும் இளம் பிறை சூடியவர். உலகுய்ய திருநடனம் ஆடுவர். வளங்கொண்டு எழும் கங்கை நீர் நாகபாம்பு இருந்தருளும் சடையர். சங்குகள் உடைய கடலின் திரையால் மோதப்பட்டு சரியுண்டு அள்ளுண்டு பரவுண்டு அலையுண்டு திசைசேரும் வெண்மணலின் குவியல்மேல் தங்தம் ஒளியுடைய முத்துக்கள் இரத்தின மணிகள் தம் ஒளியால் இரவிருள் ஒடுங்கக் காட்டி நின்று மிளிரும் நலம் உடைய அழகினல் சிறந்த தருமபுரம் எனும் பதிஅவரதாகும். 2

விண்ணுறு மால்வரைபோல் விடை யேறுவ ராறுசூ
டுவர் விரி சுரி யொளி கொள்தோடுநின் றிலங்கக்
கண்ணுற நின்றெளிருங் கதிர் வெண்மதிக் கண்ணியர்
கழிந் தவ ரிழிந் திடும் முடைதலை கலனுப்
பெண்ணுற நின்றவர் தம் முரு வம்மயன் மால்தொழவ்
வரி வையைப் பிணைந் திணைந் தணைந்ததும் பிரியார்
தண்ணிதழ் முல்லையொடெண் ணிதழ் மௌவல்ம ருங்கலர்
கருங் கழிந் நெருங் குநல் தருமபு ரம்பதியே.

வானில் உயர்ந்துற்ற பெருமலை போன்ற தொருஇடபம் ஏறுவர்; ஆற்றினைச் சடையில் சூடுவர். விரிந்து சுரிந்த ஒளி கொண்ட தோடு திருக்காதில் நின்று இலங்கிட கண் பொருந்த நின்று மிளிரும் வெண்கதிர் பரப்பும் இளம் கீற்றுப் பிறை சடை மேல் அணிந்தவர் . இறந்தவரது இழிவான முடை நாற்றமுடைய தலையின் ஓடு பிச்சைப்பாத்திரமாகக் கொண்டு பெண் ஒரு பாகம் பொருந்த நின்றவர். அவர் தமது உருவத்தை திருமாலும் பிரமனும் தொழ அரிதாயவர். ஒரு பெண்ணைப் பிணைந்து இணைந்து அணைந்து கொண்டு அதனைப்பிரியார். குளிர்ந்த இதழுடைய முல்லை மரத்துடன் நன்குடைய இதழ் கொண்ட மௌவல் மலர் மரமும் அருகாக நின்று மலர கருஞ்சேற்றுக்கழி நிலம் நெருங்கிய நல்லதருமபுரம் அவர் பதியாவது. 3

வாருறு மென்முலைநன் னுதல் ஏழையொ டாடுவர்
வளங் கிளர் விளங் குதிங் கள்வைகிய சடையர்
காருற நின்றலரும் மலர்க் கொன்றையங் கண்ணியர்
கடுவ் விடை கொடி வெடி கொள்காடுறை பதியர்
பாருற விண்ணுலகம் பர வப்படு வோரவர்
படு தலைப் பலி கொளல் பரிபவந் நினையார்
தாருறு நல்லரவம் மலர் துன்னிய தாதுதிர்
தழைபொழில் மழைந் நுழை தருமபு ரம்பதியே.

வார்பூட்டிய மெல்லிய முலையுடையவளும் நல்நெற்றி உடையவளுமான ஏழையாகும் ஏந்திழையுடன் ஆடுவார். வளங்கிளர விளங்கும் இளம் பிறை இருந்த சடையர். மேகம் போல் நின்று மலரும் கொன்றைப் பூமரத்துக் கண்ணிகள் சூடியவர். கடிய நடையுடைய இடபக் கொடியர். சுடும்போது வெடிக்கும் சத்தம் வரும் காடாய சுடலையில் வாழ்பவர். இப்பூமியும் வான உலகமும் போற்றப்படும பெரியோராயவர். தாம் இறந்தாருடைய தலையில் பலி கொள்வது பரிசிலாத செயல் என்பதை நினையார். நல்ல மாலையாக நல்ல நாகம் உடையவர். மலர்கள் மலர்ந்து மகரந்தப் பொடிகள் சொரியத்தழைத்த சோலையின் இடையாக மழைமேகம் நுழையும் தருமபுரம் பதியாக உடையவர். 4

நேரும வர்க்குணரப் புகி லில்லைநெ டுஞ்சடைக்
கடும் புனல் படர்ந் திடம் படுவ்வதொர் நிலையர்
பேரும வர்க்கெனையா யிர முன்னைப்பி றப்பிறப்
பிலா தவ ருடல் தடர்த் தபெற்றியா ரறிவார்
ஆரம வர்க்கழல்வா யதொர் நாகம ழஃகுறவ்
வெழுஃ கொழும் மலர் கொள்பொன் னிதழிநல் லலங்கல்
தாரம வர்க்கிமவான் மகள் ஊர்வது போர்விடை
கடி படு செடி பொழில் தருமபு ரம்பதியே.

அவரை அடைய விரும்புவார்க்கு உணரப்படும் வகையாகச் சென்ருல் அவரது நிலையில் அதை எவ்வாறென்று அறிய முடியாது. நெடிய சடைமீது கடிய தாய்ப்பெருகும் கங்கை நீர் படர்ந் திருப்பதொரு நிலையர். அவருக்கு பேரும் எத்தனையோ ஆயிரமுண்டு. முன்னைய பிறப்பு இறப்பு இலாதவர். அவருடைய உடல் இருந்த வடிவம் யாரறிவார். அவர்க்கு மாலை நெருப்பான நஞ்சின்வாயுடைய தொரு நாகம். அதடனுன் அழகுற வளர்ந்தோங்கிய கொழுமலர் கொண்ட பொன் கொன்றைபூவே நல்மாலையாவது. அவர்க்கு தாரமாய மனைவி இமயமலை அரசன் புத்திரி. அவர் ஊர்வது போர் செயும் இடபம். அவ்வாருன பெருமானுக்கு வாசனை உடைய செழித்த சோலையுடைய தருமபுரம் பதியாவது. 5

கூழையங் கோதைகுலா யவள் தம்பிணை புல்கமல்
குமென் முலைப் பொறி கொள்பொற் கொடியிடைத் துவர்வாய்
மாழையொண் கண்மடவா ளையொர் பாகம கிழ்ந்தவர்
வலம் மலி படை விடை கொடிகொடும் மழுவ்வாள்
யாழையும் எள்கிடவே ழிசை வண்டுமு ரன்றினந்
துவன் றிமென் சிறஃ கறை யுறந்நறவ்வி ரியுந்நல்
தாழையும் ஞாழலுந்நீ டிய கானலி னள்ளலி
சையுள் விளந் துயில் பயில் தருமபு ரம்பதியே- ம ப பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூழையான அழகிய கொண்டை விளங்கியவள், அழகிய பூமாலை ஒன்று அணியப்பெற்று விளங்கும் மெல்லிய முலையுடன் தேமல் உடைத்தாய பொற்கொடி போன்ற சாயும் சிறுகிய இடையவள், பவளம் போலும் வாயும் பொன் போல் மிளிரும் கண்ணும் கொண்ட உமையம்மையாரை ஓர் பாகமாகக் கொண்டு மகிழும் பெருமான். வலத்தால் மலிவுற்ற படையாக இடபக் கொடியும் கொடிய மழுவாளும் உடையவர். யாழின் இனிமையையும் பழிக்கும் ஏழிசைவண்டு முரன்று இன மாகக் கூடி மென் சிறகுகளாலும் இசை அறையும் போது தேன் சொரியும் நல்ல தாழையும் குங்கும மரமும்நீட வளர்ந்தோங்கிய கழிக்கரைகானல் நிலத்துற்ற நல்ல பறவைகள் துயிலும் தருமபுரம் அவரது பதியாவது. 6

தேமரு வார்குழல் அன் னந டைப்பெடை மான்விழித்
திருந் திழை பொருந் துமே னிசெங்கதிர் விரியத்
தூமரு செஞ்சடையில் துதை வெண்மதி துன்றுகொன்
றைதொல் புனல்சிரங் கரந் துரித்ததோ லுடையர்
காமரு தண்கழிநீ டிய கானல கண்டகங்
கடல் லடை கழி யிழி யமுண்டகத் தயலே
தாமரை சேர்குவளைப் படு கிற்கழு நீர்மலர்
வெறி கமழ் செறிவ் வயல் தருமபு ரம்பதியே.

தேன்மருவும் பூச்சூடிய அழகிய கூந்தலுடையவளும் அன்ன நடையுடையவளும் பெண்மானின் விழி உடையவளும் திருந்திய நல் ஆபரணமணிந்தவளுமாய உமையம்மை பொருந்திய மேனி உடையவராய் செஞ்சோதி பிரகாசிப்ப; தூய்மை விளங்கும் செஞ்சடைமீது விளங்கிய வெண்பிறை விளங்க கொன்றை மலருடன் முன்னுன காலத்து எடுத்து அணிந்த கங்கைநீர், சிரிக்கும் தலை ஒன்று மறையவைத்து புலி உரித்து உடுத்த தோல் உடையவர். அழகியதும் குளிர்ந்ததுமான கழி நிலம் நீடியகானல் நிலத்தில் நல்ல தாழைகள் கடல் கரையோரமாக நிற்ப அதற்கு அருகாக கழி நிலத்து வளர்ந்த நீர் முட் செடியின் அயலாக தாமரைப்பூ அருகே நின்ற கருங்குவளை மலரும் நீர்க்கிடங்கில் செங்கழு நீர் பூமலர்ந்திட அதன் வாசம் கமழும் பரந்த வயல் உடைய தருமபுரம் அவரது பதியாவது. 7

தூவண நீறகலம் பொலி யவ்விரை புல்கமல்
குமென் மலர் வரை புரை திரள்புயம் அணிவர்
கோவண மும்முழையின் னத ளும்முடை யாடையர்
கொலைம் மலி படை யொர்சூ லமேந்திய குழகர்
பாவண மாவலறத் தலை பத்துடை யவ்வரக்
கனவ் வலி யொர்கவ் வைசெய் தருள்புரி தலைவர்
தாவண ஏறுடையெம் அடி கட்கிடம் வன்தடங்
கடல் லிடுந் தடங் கரைத் தருமபு ரம்பதியே.

தூயதான வெண்மை நிறமுடைய திருநீறு மார்பில் பொலிய அதனுடன் வாசனை கொள்ள விளங்கும் மென்மையான பூமாலையை மலைபோன்ற திரண்ட தமது பெரும் தோளில் அணிகின்றவர். கோவணமும் மான்தோலும் உடுத்த ஆடையாகக் கொண்டவர். கொலை மலிந்த படையாகும் சூலத்தை திருக்கரத்து ஏந்தி தோடணிந்த காதுடையவர். பாடல் வண்ணமாக அலறும் படி பத்துத்தலை உடைய அந்த இராட்சதன் இராவணனது வலி ஒடுங்க ஓர்வகை செய்து அவனுக்கும் அருள் புரிந்த தலைமைப் பாடுடையவர். தாவிச்சொல்லும் நல்ல வண்ணமுடைய எருதை வாகனமாக உடைய எம்பெருமானுக்கு இடம் வலிய கடல் ஒலமிடும் அகன்ற கரைஉடைய திருத்தரும புரமெனும் பதியாவது 8

வார்மலி மென்முலைமா தொரு பாகம தாகுவர்
வளங் கிளர் மதி யர வம்வைகிய சடையர்
கூர்மலி சூலமும்வெண் மழு வும்மவர் வெல்படை
குனி சிலை தனிம் மலை யதேந்திய குழகர்
ஆர்மலி ஆழிகொள்செல் வனும் அல்லிகொள் தாமரைம்
மிசை யவன் அடியும்முடி யளவுதாம் அறியார்
தார்மலி கொன்றையலங் கலு கந்தவர் தங்கிடந்
தடங் கடல் லிடுந் திரைத் தருமபு ரம்பதியே-

வார்பூட்டிய மென் முலை உடைய பெண் ஒரு பாகமாக வடிவுகொண்டவர். வளம் தோன்றும் பிறையும் பாம்பும் அணிந்த சடை உடையவர். கூர்மலிந்த சூலமும் வெண்மை ஒளி உடைய மழுவாளும் அவருடைய வெல்படையாக உடையவர். வளைந்த வில்லாக மலையை ஏந்தியவர். தோடணிந்த காதுடையவர். அழகு செறியும் சக்கரப்படை உடைய செல்வன் நாராயணப் பெருமானும் அல்லியான இதழ் கொண்ட தாமரை மலர்மேல் அமரும் கடவுளாக பிரமனும் தேடியும் அவர் அடியின் முடியின் அளவு தான் அறியார். தாராக மலியும் கொன்றைப் பூமாலையை உகந்தவர் தங்கிய இடம் விசாலித்த கடல் கரையில் மோதும் திரை உடைய தருமபுரம் எனும் பதியாவது. 9

புத்தர்கள் தத்துவர்மொய்த் துறி புல்கிய கையர்பொய்ம்
மொழிந் தழி வில்பெற் றியுற் றநற்றவர் புலவோர்
பத்தர்க ளத்தவமெய்ப் பய னுகவு கந்தவர்
நிகழ்ந் தவர் சிவந் தவர் சுடலைப்பொடி யணிவர்
முத்தன வெண்ணகையொண் மலைமா துமை பொன்னணி
புணர்ம்முலை யிணை துணை யணைவதும் பிரியார்
தத்தரு வித்திரளுந் திய மால்கட லோதம்வந்
தடர்ந் திடுந் தடம் பொழில் தருமபு ரம்பதியே.

தத்துவம் பேசும் புத்தர்களும் உறி ஏந்தியகையுடையவராய் மொய்த்து வரும் சமணரும் பொய்மொழிந்தாலும் தாம் என்றும் அழிவிலாத தன்மை கொண்ட நல்ல தபோதனர் புலவர்கள் பத்தர்கள் அவர்புரியும் தவத்திற்கு மெய்பயனுக தாமே விளைவு கொள்ள மகிழ்ந்தவர். என்றும் உள்ளவர். செவ்வண்ண முடையவர். சுடலைப் பொடி பூசுவர். முத்துப் போன்ற வெண்மை ஒளியுடன் புன்முறுவலுடைய அழகிய மலையரசன் புத்திரியின் பொன் அணிந்த இருமுலையை துணையாக அணைவதையும் விட்டு நீங்கார். தத்தும் அருவித்திரள்கள் செலுத்திய பெருங்கடல் வந்து அடர்ந்திடும் பெரும் சோலை சூழ்ந்த தருமபுரமே அவர் பதியாவது; 10

பொன்னெடு நன்மணிமா ளிகை சூழ்விழ வம்மலி
பொருஉ புனல்திருஉ அமர் புகலியென் றுலகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மபபா

தன்னெடுநேர்பிறவில் பதி ஞான சம்பந்தனஃ
துசெந் தமிழ்த் தடங்கடல் தருமபுரம் பதியைப்
பின்னெடு வார்சடையிற் பிறை யும்மர வும்முடை
யவன் பிணைதுணை கழல், கள்பேணுத லுரியார்
இன்னெடு நன்னுலகெய் துவ ரெய்திய போகமும்'
உறு வர்கள் இடர் பிணி துயரணைவ் விலரே.

பொன்னுய நெடும் நன் மணிமாளிகை சூழ விழா என்றும் மலிய நிகரிலாத நீர்மல்க திருவிளங்கும் சீர்காழி என்று உலகில் தனக்கு நேராக வேறு பெயர் இல்லாத அப்பதியில் வந்த ஞானசம்பந்தனுடைய செந்தமிழால் பெருகிய கடல் அருகாக உள்ள திருத் தருமபுரம் என்னும் இப்பதியை பின்னிய நெடும் சடையிற் பிறையும் பாம்பும் உடைய பெருமானது என்றும் உள்ளத்து இசைந்த துணையான திருவடிகள் பேணி நிற்கும் இயல்புடையார். இந்த நெடிய நல் உலகத்து என்றும் வாழ்வார்கள் அங்கு அவர்க்கு இவ்வுலகில் அடையும்எல்லாப் போகமும் பெறுவார்கள் இடர் பிணி துயரம் யாவும் என்றும் தம்பால் அடையப் பெறமாட்டார்கள். 11

## தேவாரம் தோத்திரம் அன்று. அவை முழுவதும் வேதமே என்றமைக்கு சான்றுரை பகரச் சிலவார்த்தைகள். எமது தமிழ் இனம் உய்ய வேண்டின் தமிழ் வேதமாம் தேவாரத்தினை போற்றவேண்டும். நம்மைப் பெற்ற தந்தையை மதிப்பிலாதவர் என விடுத்து பிறரைத் தந்தை எனக்கொள்வது முறையா? தருமமோ?

## யாழ்ப்பாண மக்களே சிந்தியுங்கள்! காசை புகழுக்கும் பெருமைக்கும் பாழாக்காதீர்! தருமத்தை விளங்கிச் செய்யுங்கள் தமிழ் இனம் உய்ய வழி செய்யுங்கள்

சீர்காழி என்னும் நகர் பன்னிரண்டு பெயர் கொண்டது. அந்த பன்னிரண்டு நாமமும் அக்கோவிலில் உள்ள ஆதியான சிவனை கடவுளர் வழிபட்டு உய்ந்த காரணத்தால் வந்தவை. இவற்றை அத்தல புராணவரலாற்றில் காணலாகும். இந்த நகரத்து சிவபாதவிருதயர் (சிவனை தமது இருதயத்துக் கொண்டவர்) என்னும் புண்ணிய அந்தணரின் திருக்குமாராக திருஞானசம்பந்தர் திருஅவதாரம் செய்தார். இவர் பிறந்த காலத்து அவர்க்கு சூட்டிய நாமம் யாதோ அறியோம்.

தந்தையார் சிவனருளினுல் பெற்றதால் மிகு அருளாம் பேணலுடன் இப்பிள்ளையை வளர்த்திட இப்பிள்ளை வளர்ந்து வருகின்றுர். வருகின்ற அக்காலத்தில் தந்தையார் ஓர் நாள் சீகாழிக் கோவிலில் முன்புள்ள திருக்குளத்து தாம் சென்று நீராடி தருப்பணம் செய்யப் புறப்படுகின்றுர். புறப்படும் நேரம் அவரது திருமாளிகை முற்றத்து விளையாடி நின்ற திருமகனுர் தந்தையார் வெளியே போவதைக் கண்டு தாமும் தந்தையாரைத் தொடர்கின்றுர்.

தொடர்ந்துவரும் மகனுரை; தாம் மூழ்கும் குளத்திற்கு அழைத்துச் செல்வது கூடாது என்பதை உணர்ந்த தந்தையார் சிவபாதவிருதயர் தம் மகனுரை நோக்கி நீவரக்கூடாது என்று வெருட்டிப் பார்க்கிறுர். அவர் வெருட்டுதல் பயனளிக்கவில்லை. பதில் பிடிவாதமே கூடிக்கொள்கின்றது. தந்தையார் வெருட்டினுலும் பயப்பட்டுத்திரும்பாது பதில் தனது சிறிய கிண்கிணிக் காலை நிலத்தோடடித்து அப்பா நான் வருவேன் என்று சாதித்தால் தந்தையார் என் செய்யலாம். சரி உன் செயல் இதுவாயின் நீயும் வா என்று மகனுரைத்தூக்கி தோள் மேல்கொண்டு குளக்கரை செல்கின்றுர். குளத்தடியில் சென்றதும் மகனுரை கரைமேல் விட்டு தான் நீரினுள் இறங்கி மூழ்குகின்றுர். தனது (அகமருடம்) உடம்பு முழுவதையும் அமிழ்த்தி மூழ்கவேண்டி வருகிறது. அப்படியானுல் தன்னைக் காணுது குழந்தை தவித்து தானும் நீரில் வந்து இறங்குவாரோ என்ற பயம் ஒருபுறம் தன் கடமையில் தவறுவது சரி இல்லை என்ற பயம் இன்னெருபுறமாக வந்திடலும்; அந்தநேரம் அவர் சிந்தை தனது வேண்டுதலுக்காக தனக்கு அப்பிள்ளையைத்தந்த பெரிய நாச்சியாரும் பெருமானும் முன்னுகப்பார்த்திருப்ப என்ன பயம். நான் விதிப்படி நீர் மூழ்குவேன் எனற துணிவால் உடம்பு முழுவதையும் மறைத்து நீர் மூழ்கினுர் சிவபாதவிருதயர். கரையில் நின்ற பிள்ளையார் தந்தையாரை இப்பொழுது காணவில்லை. கலக்கம் வருகின்றது. பயம் வருகின்றது. பதட்டமுடன் உதடுகள் துடிக்கின்றன. கண்கள் கலங்குகின்றது. முத்துப்போல் நீர் துளிகள் அரும்ப வேறெங்கும் பார்த்திழாது தன்தாயை முன் நினைந்து கோவிலையே நோக்கி விம்மி அழுதார்.

குழந்தைஅழுதஅக்கணமே பெரிய நாச்சியாருடன் தோணி புர ஈசன் அக்குழந்தை முன்தோன்றி அழுத அக்குழந்தைக்கு சிவ ஞான அமுது குழைத்த ஞானப்பாலை பொற்கிண்ணத்துக் கொண்டு ஊட்டுகின்றுர். அப்பன் அருளால் அம்மை ஊட்டியபாலை உண்டபின் குழந்தை அழுகை தீர்ந்து எல்லாம் உணர்கின்ற சிவ ஞானசம்பந்தர் ஆகின்றுர் எப்பொருளும் ஆக்குவன் சிவன் என்ற உணர்வில் அந்த உண்மைப்பொருளாவது சிவனுக்கே ஆளாகும் நிலை என்றது தெளிவுவர ஏனைய உலக நிலையில் எழக்கூடிய எல்லாப்பந்தங்களும் நீங்கி எழும் உணர்வரிய மெய்ஞ்ஞானத்தைப் பெற்றுக் கொள்கின்றுர். அந்த ஞான உணர்வால் ஈசனை ஏழிசை பெறப்பாடுகின்ற இயல்பும் வருகின்றது. இதனுலே நீர் மூழ்கி எழுந்து வந்து யார் கொடுத்த பால் சோறு நீ உண்டரய் என்ற தந்தையாருக்கு தமது பால் ஊட்டிய பெருமானை தோடுடைய செவியன் எனத்தொடங்கிப் பாடி கோபத்துடன் கேட்ட தந்தையாரையே பரவசமாக்கும் படி செய்கின்றுர். ஆகவே அன்று அவர் திருவாக்காக எழுந்த பாடல் உள்நின்று ஊனினையும் உருக்கவல்ல ஒருவனைக் கலந்தெழும் இசையாக பெரும்பாலும் சிவத்திடத்து இருந்து ஊற்றெடுக்கும் இசையாக அது பெருகிக் கொண்டது. இந்த இசையுடைய பதிகம் எல்லா நிலையிலும் அடியார் உள்ளத்தைப் பரவசப்படுத்துவதாக இருந்தது. அதுவன்றி அப்பாடல் யாவும் சிவசம்பந்த மானபடியால் தமிழ் வேதம் எனக்கொள்ளப்படுவது.

வடமொழியில் வந்த வேதங்களும் முனிவர்கள் உள்ளங்களில் கேட்கப்பட்டன. அதன் பின்னர் அவை சூத்திரங்களாக அம் முனிவர்களால் உலகிற்கு மொழியப் பட்டன. இவைகள் ஓர் புலமை உடைய வித்துவான் செய்யுள் இயற்றும் தன்மை பேரன்றதல்ல. அறிவிற்கு அறிவான பெருமானை அருளால் தொடர்ந்து அந்த பேரோசையை உளங்குளிரக் கேட்டு உலகில் மொழிய வந்தவை வேதங்கள். அதே போன்று அந்த வேதக்கருத்துக்கள் சிவ ஞான அமுதுண்ட பேற்றினுல் திருஞானசம்பந்தர் முறறிலும் சிவனது உரையாக மொழிந்ததுவே தமிழ் வேதம். இது தோத்திரமாக ஒருபோதும் இல்லை. வட மொழியில் வல்லுனரான பண்டிதர்கள் தோத்திரம் பல செப்பி உள்ளனர். அவை இன்றும் கோவிலில் தோத்திரமாக ஓதப்பெறுகின்றது. ஆனுல் தேவாரம் அப்படி அன்று. அவை முற்றிலும் சிவனருளாவது என்பதனை இந்த தேவாரப்பதிகங்களை சுவாமி சந்நிதியில் ஓதும் படி அந்தணர் கேட்கும் போது

### "அகிலாண்ட கோடிபிராமண்டநாயகா சுவாமி பராக்கு தேவாரம் அருளிப்பாடுக"

என்று மொழிகின்ற போது அதன் கருத்தை உற்று நோக்கினுல். அகில கோடி உலக அண்டக்கட்கெல்லாம் நாயகமானவரும் மேலானவரும் சர்வவல்லமை உடையவருமான பெருமானின் தேவாரம் அருளில் பாடுக என மொழிகின்ற வாருகும். இந்த ஒரு தன்மையினுல் தேவாரம் முற்றிலும் திருவருளின் பெருக்கமுடைய ஆதியந்தமிலாத கடவுளிடம் தோன்றயதே என்பதை நாம் உணரலாம்.

அடுத்து திருஞானசம்பந்தப்பெருமானும் இதனை எனதுரை தனதுரையாக என்று கூறியருள்கின்றமையால் தேவாரம் முற்றிலும் சிவத்தின் ஊற்றேயாகும். ஆதலால் தேவாரம் தோத்திரம் அன்று

இந்தவகை திருஞானசம்பந்தப் பெருமான் எம்பிரானைத் தமிழ வேதம் பாடியே தலங்கள் தோறும் சென்று போற்றிவருகின்றுர். இவர் சென்று இறைவனை இசைபாடும் போது அதில் எவ்வளவு புனிதம் கடைப்பிடிக்கப் படுவது என்பதனை நாம் காணவேணடும. இநத ஒரு நிலையில் எந்த ஒந தலத்திலாவது மக்களால் ஏதும் சன்மானமோ வேறு புகழ்மாலையோ பெற்றிருப்பரா! அல்லது விரும்பி இருப்பாரா. கடவுளே! அந்த அற்புதத்தை பெரிய புராணம தெளிவு பெறக்காட்டும். அல்லது உங்கள் யாரிடம் மனதில் அழுக்கிலாத தூய்மை இருந்தால் அத்தூய்மையால் சிந்தித்து பாருங்கள். அழுக்குடைய மனம் தான பொன்பொருள் புகழ் பட்டம் இவற்றை விரும்புவது. அழுக்குடைய மனதிற்கு பெருமை இறுமாப்பு காசு கனம் கௌரவம் என்றெல்லாம் அது எணணி யுருக்கும். தன்னை பெரிதும் மதித்துக் கொள்ளும்.

உண்மையில் இன்று தமிழ் வேதமாய இப்புண்ணியப் பொருளும் கூடபுகழுக்கும் காசுக்குமாக பாவிக்கப்பட்டு அதனைப்பாடுவோர் படுகின்ற பாட்டை நோக்கினுல் வருந்தப்பட வேண்டியவாருகவும் வெட்கப்படவேண்டிய நிலையாகவும் வந்து கொண்டது.

தொடர்ச்சி ம ப பா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இதுதான் ஒருபுறம் இருந்தாலும் சினிமாப்பாடகி பாடகர் அல்லது சினிமா பிரசங்கியார் ஒரு கீர்த்தனம் பாடினுல் என்றை ஐயோ முப்பதினுயிரம் நாற்பதாயிரம் காசு கொடுக்கிருர்கள். எம யாழ்ப்பாணத்தார் அயலில் உள்ள வறுமைப்பட்ட ஓர் நல்லவருக்கு அவரும் துயர் தீர்ந்து வாழ ஐந்து சதமும் கொடார். ஆரும பசித்து வந்து கேட்டாலும் செல்லச்சன்னிதிக்குபோ சோறு கிடைக்கும் என்று சொல்பவர்கள் இவ்வளவுகாசை ஐயோ பாதகரிலும் பாதகரான சினிமா பிரசங்கியள் பாட்டுக்காறருச்கு கொடுக்கிருரே. இதுவும் கடவுள் சந்நிதிபிலா நடப்பது.?

தங்களைப் போல் கடவுளும் ஓா வியாபாரி என்று நினைந்து கொண்டாரோ? ஓர் இசையாளர் இறைவனைப் புகழ்பாடுவதைத் தொண்டாகக் கொண்டு அத்தகைய சிலமுடன் ஒழுகுவார்க்கு நிறையக் கொடுங்கள். நன்ருகக் கொடுஙகள். அது புண்ணியம். அதை விடுத்து இந்த சினிமாபாடகர் பாடகி பிரசங்கியட்கு நீங்கள் காசுகொடுப்பது மிகு பாதகம். அதை எல்லாரும் யாழ்ப்பாணத்தார் நன்கு விளங்கவேண்டும்.

திருஞானசம்பந்தப் பெருமான் தமது இசைபாடிய இறைவனைப் போற்றிவருங்கால் திரு நீலகண்டபாணனுர் என்னும் யாழ் வல்லவரான ஓர் அடியவர் திருஞானசம்பந்தப் பெருமானுடைய திருவருள் நிலையை உணர்ந்து தாம் அவரை அடைந்து போற்றுகின்ருர்.

ஈசனை சிவன் புகழை தமது யாழில் அமைத்து பாடுவதே திரு நீலகண்டப்பாணனுரது தொண்டு. திருவாலவாய் இறைவனை திருவாரூர் இறைவனை சென்று வணங்கி அவர் திருமுன்பு இருந்து தமது கற்புடைய மனைவியார் மதங்கசூளிமனியார் உடன் இருந்து பாட அகில உலகமும் மகிழதமது யாழைவாசித்துப்பாடி இறைவன் சந்நிதியில் பெரும் தொண்டு கொள்ளும் இயல்புடையவர். இந்த பாணனுரை சம்பந்தசுவாமிகள் வரவேற்று தமது தோணிபுர ஈசன் சந்நிதியில் கொண்டு சென்று இறைவன் புகழை யாழில் வாசிப்பித்து கேட்டுத்திருவுள்ளம் மகிழ்ந்தவர்.

அன்று தொடக்கம் பாணனுர் திருஞானசம்பந்த சுவாமிகளுடன் பலதலங்களெல்லாம் சென்று யாத்திரை செய்து வணங்கி வருவார். அவர் திருஞானசம்பந்தப் பெருமானது திருவுள்ளத்தின் சம்மதப்படி எம்பெருமானை அவர் பாடியநளும் திருமறையாம் பதிகங்களை அவர் பாடி முடித்தருளியபின் தமது யாழில் அமைத்து வாசித்து வருபவர்.

இப்படி வழக்கமாக வருகின்ற நாட்களிலே திருஞானசம்பந்த சுவாமிகள் திருநீலகண்டப்பாணனுரின் திருத்தாயார் பிறந்த ஊராகும திரு எருக்கத்தம் புலியூருக்குச் செல்கின்ருர். திரு எருக்கத்தம் புலியூரில் சுவாமிகள் செல்லலும் அவருடன் சென்ற பாணனுரை அவருடைய தாயாரது உறவினர் கண்டு வணங்குகின்றனர். தமது இனத்தவரை திருநீலகண்டப்பாணர் நோக்கி ஐயன்மீர். கேளுங்கள் நான் எம்பெருவாழவாம் திருஞானசம்பந்தப் பெருமானுடைய திருப்பதிகப் பாடலிற்கு யாழ் வாசிக்கும் பேறுடைவயன் என மோழிந்தார். அவ்வாறு மொழிந்திடலும் அவர் இனத்தவர் என நினைந்தார் எனின் இவர் அவருடைய பாடலிற்கு யாழ் வாசித்தலால் அவர் பாடல் மிருமேம்பாடாயிற்று என்ற வகையாக. அப்படி நினைப்பது இயல்பே. ஓர் பாடலிற்கு பக்கவாத்தியமாக யாழ் மத்தளம் வந்தால் அவை மிகு சிறப்பாக இருப்பது இயல்பு; அதே தன்மையாகப் பாணரது சுற்றத்தவர் நினைவு கொண்டு பாணரை நோக்கி மிகு உள்ள மலர்ச்சியுடன் யாழில் மிகு வல்லமை உடைய நீர் யாழ் லாசிப்ப அந்த யாழ் இசையின் இனிமைச் சிறப்பால் சம்பந்த சுவாமிகளது பண்மிகு மேம்பாடாக விளங்கியதே என்றனர். இப்படி அவர் மொழிதலும் பாணனுர். அது கேட்டலும் பயந்து நடு நடுங்கி ஐயோ இவர்கள் என்ன சொன்னவாறு! என்ன அறியாமை! சம்பந்த சுவாமிகளின் பண்ணிற்கு எமது யாழ் வாசிப்பா சிறப்புச் செய்வது என மனம் கலங்கி உடனுகச் சம்பந்த சுவாமிகள் திருப்பாதத்து வணங்கி எழுந்து திருமுன்பு நின்று ஐயனே தங்களது திருப்பதிகம் இசை இலக்கண அளவிலோ கண்டத்திலோ அன்றிக் கலம் எனப்படும் இசைக் கருவியின் இசைப்பிலோ அமையாது என்பதை வெளிப்படுத்திக் காட்டிட ஓர் திருப்பதிகம் பாடியருளல் வேண்டும் என மிகு தயவுடன் வேண்டுதல் புரிதலும் எம்பிரான் சம்பந்தர் திருவுள்ளம் மசைந்து திருத்தருமபுரம் என்னும தலத்து அமர்ந்த கடவுளை ,,மாதர் மடப்பிடி எனத் தொடங்கும் தேவாரப் பதிகம் பாடியருளுகின்ருர். (முன்னுல் தரப்பட்ட பதிகம் அதுவே) சம்பந்த சுவாமிகள் பதிகம் பாடி முடித்தருளிய பின்பு சுவாமிகள் அனுமதியின்படி பாணனுர் அப்பாடலைத தமது யாழில் அமைத்து வாசிப்ப முற்பட்டார். அது அதில் அமையவில்லை: முயன்று பார்த்தார் முடியவில்லை. என் செய்வார் அனர் உடன் நினைந்தார் அந்தோ இந்த ஒரு யாழ் என்னிடம் இருக்கப் போய்த் தான் நானும் நன்ருக யாழ் வாசிப்பேன் என நினைந்தது.

## தமிழ்வேதம் அருளவந்த திருஞானசம்பந்தப் பெருமான் பாடல் என் யாழிலும் அமையும் என்று என் உறவினர்க்குச் சொன்னது எவ்வளவு தகாத வார்த்தை.

ஆகவே எனக்கு இனி இந்த யாழ் வேண்டாம். இதனை முரிப்பேன். என யாழை ஓங்குதலும் அது கண்டருளிய சம்பந்தப் பெருமான் பாணனுரை அவ்வாறு செயாவகை தடுத்து ஓங்கிய யாழைத் தமது திருக்கரத்தில் வாங்கியருளிப் பாணனுரை நோக்கி ஐயரே இதனைச் செய்யலீர். என்று அவரை நோக்கி

எமது பதிகம் எனது அன்று. அது முழுவதும் ஆளுடைய பெருமாட்டியுடன் திருத்தோணி அமர்ந்து எங்கும் நிறைந்திருக்கும் செல்வர் அவரது பொருளாவது. அது இந்த உலகில் இசை இலக்கணத்தில் அன்றி வேறெந்த வகையிலும் அமையாது. ஆதலால் நீங்கள் நீங்கள் உம் தகுதிக்கேற்ப உமது கண்டத்திலும் கலத்திலும் அமைத்து பாடுதல் வாசித்தல் தான் உலகியல் வழக்கம். இதோ இந்த யாழை ஏற்று மீளவும் அப்பதிகத்தை அமைத்து வாசியும் எனக் கொடுத்தருளினுர் எம்பிரான் சம்பந்தர்.

பாணனுர் இப்பொழுது தமது யாழை சம்பந்த சுவாமிகளிடம் திருக்கரம் நீட்டி வாங்கி; மீளவும் சம்பந்த சுவாமிகள் திருவடி முன்பு பணிந்து எழுந்து தனது யாழ்கருவியை திரும்ப இசை கூடும் வகை அமைத்து எம்பெருமான் சம்பந்தர் அருளிச் செய்த திருப்பதிகம் ''மாதர் மடப்பிடி எனத் தொடங்குவதை அதில் அமைத்து வாசித்தார். இப்பொழுது பதிகம் நன்கு அமைந்தது. கேட்டவர் யாவரும் மனம் மகிழ்ந்து உவகைக் கண்ணீர் பெருக நின்று பாராட்டிட அவர் யாழை வாசித்தார். அது கண்ட பாணனுரது சுற்றமெல்லாம் பயந்து தமது இசைபற்றிக் கொண்ட இறுமாப்பு பெருமிதம் அனைத்தும் அகன்று புனிதராகி முறை முறை சென்று திருஞானசம்பந்தப் பெருமான் திருவடி வணங்கி தமிழ் வேத இசையின் பெருமை உணர்ந்து வாழ்ந்தனர். ஆதலின் எம்பெருமக்களே யாழ்ப்பாணத்தவரே செய்வீகமான இசை தமிழ் வேதமான தேவாரம் அதனை நீங்கள் யாவரும் உங்கள் கண்டம் கோழையுடையதாக இருந்தாலும் அதற்குரிய சந்தவகை நன்கில்லாதிருந்தலும் கூச்சமிலாது நன்ரு ஓதுங்கள். ஓதக் கேழுங்கள். ஓதி உணர்ந்து வாழ்வு பெற்று மேலோங்கி நில்லுங்கள்

ஓம் சாந்தி
ஓம் சாந்தி
ஓம் சாந்தி

# தீபத்திற்கும் ஓராண்டு பூர்த்தி

ஆன்மாவுக்கு வயசில்லை. அழிவிலாதது. நித்தியமாவது. ஆன்மா அறிவு சொருபமாவது எனப் பெரியோர் நிச்சயித்தனர்.

இந்த ஆன்ம இயல்பின் எழுந்த அருள் ஒளியின் சிறப்புடைய எம் நாயன்மாரது பேரருட் திறங்களை சந்திர தீபம் போற்றிக் கொள்ளும் பணியில் ஒராண்டு நிறைவைப் பெறுகிறது.

இன்று வரையும் எம் நாதாக்களான சிவனடியார்களின் திருப்பாதங்கட்கு இட்ட சுடர்விளக்காகப் பதினேழு சுடரை நிரப்பி அடுத்த இதழைத் தீபம் ஏற்றிட ஆரம்பிக்கின்றது.

இலங்கை நகரில் சைவம் ஓங்கவும் தமிழ் தழைக்கவும் சிவனடியார் பெருமை விளங்கவும் எடுத்த இப்பணியில் எத்தனையோ தாய்மார்கள் பெரியோர்கள் அந்தணர்கள் எம்மை ஆசீர்வதித்து ஊக்கப் படுத்தி வந்துள்ளனர். அவக்கள் யாவர்க்கும் எமது உளங்கனிந்த நன்றியினைச் செலுத்துகின்ருேம்.

ஆவ்தும் அழிவதும் எல்லாம் அவர் செயல். நாம் பாவகாரியம் செய்வாரை செய்ய முற்படுவாரைக் கண்டித்திட வேண்டி வந்ததும் அவரவரின் நன்மை பொருட்டேயன்றி வேருென்று மில்லை,

நாம் மிகு அடக்கமாகவும் புனிதமாகவும் கிந்தையில் ஏதும் அழுக்கு எக்காலமும் இன்றி தொண்டு செய்ய எமது குருபரன் ஈந்த கருணையினைப் போற்றி வாழ்த்தி வணங்கிக் கொள்கிருேம்.

எமது பணிக்கு மிகு அக்கறையுடன் பணிபுரிந்து உதவிய அச்சக ஊழியர்க்கும் பிரதி பண்ணித் தந்த அச்சக முதல்வருக்கும் நன்றி.

---

# தீபத்தின் கட்டுரைகளில் விரும்பாத செயல் கண்டுமனமுடையும் அன்பர்கட்கு தாழ்மையான வேண்டுதல்

மொட்டைக் கடிதக் குருக்கள்மாரே சண்டித்தனத்திற்கும் ஆயத்தமாகும் பெரியோர்களே வசைமாரி பாடும் பல திறப்பட்ட சைவர்களே, பண்டிதர்களே உங்களுக்கு எனது தாழ்வான வேண்டுகோள். இதுகாறும் நீங்கள் பழகிய பழக்கத்தை என் மீது காண்பிக்க எத்தனிக்கின்றீர். உமது இயல்பான குணத்தை நாம் ஒன்றும் செய்யமுடியாது. நான் பரம ஏழை தனித்தவன். எல்லா இடமும் என் மனம் விரும்பியபடி திரிபவன். யான் யார்க்குமேனும் ஓர் இறையளவும் துயர் செய்ய வசை சொல்ல விரும்பாதவன். சைவநெறியில் உள்ள தவறுகளை எடுத்துக் காட்டுவது என் பணி. இது சிவனுக்குச் செய்யும் பணி. அவனுடைய இருப்பிடத்தில் தகாத செயல் நடப்பதை தவிர்க்குப்படி வேண்டுதல் எனது தொண்டு. அப்படி நாம் சொல்வது தவறு என்று இருந்தால் நீங்கள் அவற்றை நல்ல முறையாக எனக்கு எழுதினுல் அவற்றிற்கு நான் அறிந்த மட்டில் பதில் தருவேன். அது விருப்பமில்லாதிருந்தால் நீங்கள் அடிக்கடி திருப்பணி வேலைகட்கு பண உதவி கோரும் சவுக்கார முதலாளி பீடி சினிமா முதலாளியிடம் தனிஅச்சகமும் ஓர் செய்திப் பேப்பரும் உண்டு. அதுவுமன்றி உங்களுக்கு விடயம் விளங்காட்டில் நல்ல இலக்கணமாக தமிழ் எழுதப் பண்டித மணியும் அவர்களது சீடர்களும் இதுக்கின்றனர். இதற்கு மேலாக இலங்கை கல்வித்துறை வளாகங்களில் வடமொழி தென்மொழி கரைகண்ட பெரியோர் உண்டு. அவர் மூலமாக உங்கள் அபிப்பிராயங்களை மனித முறையில் தரவும்,

சுபம்.

## மேன்மை கொள் சைவ நீதி
## விளங்குக உலகமெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோக சுவாமிகள் உணர்த்திக் காட்டும்சீலங்கள்

இவ்வுலகில் பல பெரியார்கள் தோன்றி உள்ளார்கள்: ஆனுல் அவர்கள் யாவரும் உண்மையாம் தவத்தைச் செய்து ஓர் உறுதியைத் தெளிந்து கொண்டு பிறர்க்கும் நன்மை பயக்கும் படி சில வார்த்தை சொல்லிப் போய் இருக்கின்ருர்கள். தெளிவு பெருத ஒருவரின் சொல்லிலும் தெளிவு பெற்ருர் சொல் உறுதுணை போன்றது. ந்த வகையாக எமது முன்னைப் பெரியோராம் நாயன் மார் வாழ்ந்து காட்டிச்சென்ற உண்மையும் தவமும் தருமமும் ஒருங்கே நம் கண்ணுல் நேரில் கண்டு தெளியக் கூடிய ஓர் உருவமாக அமைந்த ஒருவர் தான் யோக சுவாமிகள்;

அவருடைய வாழ்வு முழுவதும் பெரிய புராணத்து கூறப்படும் சீலம் அடிப்படையாகக் கொண்டது. ஏதும் ஒரு அழுக்கு ஓர் இறையளவேனும் இல்லாத ஒரு வடிவமே யோக சுவாமிகள். ஏசிக்கலைத்தாலும் அந்த ஏச்சிலும் கருணை தொனிக்கக் காணலாம். ஐயோ! அதைப் போன்ற கிருபை உடைய பொருளை வேறு எங்குமே நாம் காணமுடியாது.

சுவாமிகள் கனக்க சொல்லாது. ஆனுல் சொன்னுல் அவ உள்ளத்தை தொடும் படியாகச் சொல்லி ஒருவருடைய உள்ளப் போக்கையும் மாற்றும் படியான ஆற்றல் உடையவர். தன்னை வணங்கச் செல்வாருடைய இயல்பு குலம் கோத்திரம் பெயர் நடத்தை இன்னும் அவர்பால் விளையும் பிற செயல் அனைத்தும் ஒருவர் சொல்லாமலே உணர்பவர்; ஆனுல் கிட்டப் போய் தரிசிக்கும் பொழுது உடலே நடுங்கும் படியான உறுதி உடையவர். அவருடைய திருக்கண்கள் என்நேரமும் மின் ஒளி பல்ப்போன்ற பிரகாசமுடன் இருக்கும். நரைத்த கூந்தலை அள்ளி எமது முன்னைய பூட்டிமார் செருகுவது போன்ற செருகலும் தாடியும் துடுக்காட்டியமும் வெள்ளை ஆடையும் அட்டனை இட்ட திருப்பாதமும் காண்பார் எவர் உள்ளத்தையும் தொடும் படி இருக்கும். சில வேளை ஏதும் நினைத்துச் செல்வார் சிந்தையின் நினைப்புக் கேற்ற பதில் கேளாமலே நேராக வரும் மாண்பும் திகைத்திடவே வைக்கும். அத்தகைய புண்ணிய சொரூபத்தின் சுருக்கமான இயல்பைச் சொன்னுல் வைதிகம் மூத்த தொரு வடிவமாக உள்ளது என்றே சொல்லலாம்;

அவருடைய அருமந்த நெறியை சிறிது: முன்னர் அவரை நேரில் சென்று தரிசிக்கும் காலத்து உணரமுடிந்ததாயினும் பெரிய புராணத்தை நன்கு கற்றுத்தெளிந்த பின் தான் அவருடைய சீலத்தின் உயர்வை நன்கு அறிய முடிந்தது. நான் அவரை நேரில் தரிசித்திடா திருந்தால் பெரிய புராணத்தை இராகம் இழுத்து படிப்பதிலும் பயன் சொல்லுவதிலும் வாழ் நாளைக் கழித்திருப்பேனே அன்றி அதில் உள்ள சீலத்தின் சங்கதிகளை விளங்கிக் கொண்டிருக்க மாட்டேன்.

ஏதோ என் வாழ் நாளில் அடிக்கடி யோக சுவாமிகளை தரிசிக்க வேண்டும் என்ற நினைப்புகள் வரும். அப்படியான காலங்களில் வழியில் சுவாமிகள் செல்லக் கண்டால் பின் சென்று வணங்குவதுண்டு. அப்பொழுது சுவாமிகள் சில வார்த்தைகள் சொல்வார். எனக்கு உத்தியோகம் கிடைத்த நாட்களில் ஒரு நாள் சுவாமி மாட்டு வண்டியில் சென்று கொண்டிருப்பக் கண்டு பின் சென்று தரிசித்து எனக்கு உத்தியோகம் கிடைத்தது பற்றிச் சொன்னேன். சொன்னதும் உடன் நல்ல காரியம் ஒழுங்காக நடவும்;

### கைக் கூலி வாங்காதையும்

என்ருர்: ஆம் கைக் கூலி வாங்காத போது அது கடவுட்கு செய்யும் பணியுமாகும் என்பது கருத்தாவது;

அடுத்து

### உமது நாட்டில் உமது மக்களுக்கு உம்மாலான சேவையைக் கரவின்றிச் செய்யும் என்ருர்;

இதுவும் எனக்கு பெரிய தொரு வரப்பிரசாதவாக்காக இருந்தது;

இன்னுமொரு நாள் நான் ஓர் பொதுசன சேவைக்காக லீவு எடுக்க வேண்டி இருந்தது. அப்பொழுது யாழ்ப்பாணத்தில் நான் மதுவை ஒழிக்கும் பிரசாரத்தில் ஈடு பட்டிருந்தேன். அன்று சுவாமிகளைச் சந்திக்க முன் எனது கந்தோரில் சென்று எனக்கு லீவு தரும்படி கேட்டேன்; எனது மேலதிகாரி சினந்து விழுந்து லீவு தரமுடியாது நீர் வேலைக்கு வரவேண்டும் எனச் சொன்னுர். நான் சரி இவருக்கு சரியான பாடம் படிப்பிக்கிறேன். நாளைக்கு எனக்கு சுகமில்லை என்று வைத்திய அத்தாட்சிப் பத்திரம் அனுப்பி விட்டு எனது மதுவிலக்குப் பிரசாரம் செய்வது என்று எண்ணிக் கொண்டு வரும் போது சுவாமிகளைக் காண நேர்ந்தது; உடன் சுவாமி கேட்டார் ''நாளைக்கு மதுவிலக்கு நீயும் பிரசாரத்திற்கு போகப் போருயோ'' என்றதாக. நான் சொன்னேன் போகின்றேன் என்று. அப்படியாயின் லீவு எடுத்தாய் விட்டதா எனக் கேட்டார். நான் இல்லை சுவாமி என்றேன். லீவு இல்லாமல் எப்படி நீ போகலாம் என்ருர். நான் சொன்னேன் சுவாமி நாளைக்கு ஒரு வைத்திய அத்தாட்சிப் பத்திரம் சுகமில்லை என்று அனுப்பிவிட்டுப் போகப் போறன் என்றேன். அது கேட்டவுடன் சுவாமி சிரித்துக் கொண்டு;

### அரசாங்கத்தை ஏமாற்றல் பாதகம். அன்றியும் ஆரையும் மாற்றல் பாதகம்.

ஆதலால் உடன் போய் உனது முதலாளியிடம் உள்ளத்தைச் சொல்லி லீவு கேள். இல்லாதிருந்தால் உள்ளத்தைச் சொல்லிச் சம்பளமில்லாத லீவு தரும்படி கேள் என்ருர். நான் நடுங்கிப் போனேன். அறியாமை என்பது இது தான்; உண்மை வழியில் என்னை நிறுவிய இந்தப் பெருங் கருணைக்கு என்ன கைமாறு செய்யலாம் என எண்ணித் திரும்பி என் கந்தோர் மேலதிகாரியிடம் சென்று உண்மை சொல்லி லீவு கேட்டேன்; சம்பளமில்லாத லீவு தரப்பட்டது.

இன்னுவொரு முறை ஒரு நண்பர் எனக்கு ஒரு கதை சொன்னவர். அவர் ஓர் சைவப் புலவராக உள்ளவர். சுவாமிகளின் அன்பர். அவர் சொன்னுர் தமது ஊரில் தமது கோயிலுக்கு ஓர் முருகபக்தர் அக்காலத்தில் ஒரு இலட்சம் ருபா வரையில் செலவு செய்து தேர்த்திருப்பணி செய்தார். தேர் செய்து வெள்ளொட்டத்திற்கு அந்த முருகபத்தர் ஆயத்தமானுர். ஆனுல் அந்த பத்தருடைய வருவாய் பெரும் பாலும் போதை வஸ்து விற்பனையின் தொடர்பால் பெருகிக் கொண்டது. எனினும் அவர் ஆப்பணம் கொண்டு தாராளமாக கோவிலிற்கு கட்டிடத் திருப்பணி முதல் பல திருப்பணிகளும் இன்று எந்த ஒரு செல்வந்தரும் அப்படித் துணியாத வகை துணிந்து செயல் புரிந்தவர். வெள்ளோட்டத்தின் முதனுள் இரவு வரையும் தங்களுக்கும் அலுவல்கள் நிறைய இருந்தது. இவைகள் எல்லாம் முடித்து இரவு எட்டுமணி வரையில் அந்த முருகபத்தர் தன்னை நோக்கி நாளைக்கு இவ்விடம் யோக சுவாமிகளையும் வரவழைக்க வேண்டும். ஒருக்கால் சென்று அவரை வரும்படி கேட்போம் என்று சொல்ல நானும் ஏற்று அது சரி தான் என்று சுவாமிகளிடம இரவு 9 மணியின் பின்னுக சென்ருேம். சுவாமிகள் ஆச்சிரமக் கதவு பூட்டியிருந்த நேரம் நாம் மெதுவாக கதவில் தட்டினுேம். சுவாமி உதார் என கேட்டார். நாங்கள் எங்கள் ஊர்ப்பெயர் சொல்லி கதவில் தட்டிய என்பெயரையும் சொன்னதும் சரி நீயோ என்று சுவாமி கதவைத் திறந்தார். திறந்ததும் நாம் உட்சென்று சுவாமிகளைத் தரிசித்து பின் எங்களுடன் பல கதையும் கதைத்துக் கொண்டு போகும் போது நாங்கள் அவரிடம் தேர் வெள்ளோட்டம் பற்றி ஏதும் ஒரு வார்த்தை சொல்லுமுன் கதையோடை கதையாக யோக சுவாமி என்னை நோக்கி

### இங்கு பாரும் "அபின் காசில் ஆரும் தேர் கட்டினுல் நமக்கு என்ன நான் ஒரு பரதேசி

என்ருர். நான் திடுக்கிட்டுப் போய் நாம் போன விடயம் பற்றி வேறு ஒரு கதையுமிலாது அவ்வளவுடன் விடை பெற்று மீண்டு வந்தோம் என அந்தச் சைவப் புலவர் என்னிடம் தெரிவித்தார்.

திருப்பணிக்குப் பொருள் ஈட்டல் மெய் வழியாக வந்த பொருளாக அமைதல் நன்று. இதனை ஈனமிலா நெறி வந்த பொன் கொண்டே திருப்பணி செய்தல் நன்று என்று புராணங்கள் வலியுறுத்துகின்றன. இதனைச் சினிமாக் காட்சி, லொத்தர், மதுப்பொருள்விற்பனை மூலம் கிடைக்கும் பொருள் கொண்டு திருப்பணி செய்தல் நன்று அல்ல என்பது துணிபாகும். பல மக்களைப் பாழாக்க உதவுகின்ற பொருள்களால் வரும் வருவாய் தனக்கு ஒரு காலமும் ஓர் நன்நெறியைத் தேடித் தராது. அது செய்யும் போது சுலபமாக இருக்கும். ஆனுல் செய்த செயல்களுக்குப் பலன் அனுபவிக்கும் பொழுது தான் சங்கடம்.

இன்னுமொரு முறை ஓர் அன்பர் எனக்கு ஒரு கதை சொன்னவர்; அவர் சிவதொண்டன் நிருவாக சபை அங்கத்தவரில் ஒருவர். அவர் சொன்னுர். ஒரு நாள் தான் யோக சுவாமிகளுடைய ஆச்சிரமத்தில் இருந்திடும் போது ஓர் அன்பர் அவரைத் தரிசிக்கும்படி வந்தார். அவரை எனக்கும் தெரியும். அவர் திருமணமாகாது தாம் வாழ நினைத்தவர். அப்படியான அவர் வந்து சுவாமியைத் தரிசித்துக் கொண்டு வர அவரை நோக்கி

### "இங்கு பார் கண்ட கண்ட இடத்தில் எல்லாம் கலியாணம் செய்யாமல் உனக்கு என்று ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து செப்பமாக வாழப்பார்"

என்று கூறினுர். நானும் திகைத்தேன். அவரும் திடுக்கிட்டுப்போனுர். நாங்கள் இருவரும் அங்கிருந்து விடை பெற்று வெளியில் வந்த போது அவரை நோக்கி ஏன் இன்றைக்கு உமக்கு இந்தக் கதை என்றேன். அப்போது அவர் சொன்னுர் உண்மையை. தான் கலியாணம் முடிப்பதில்லை என்ற விரதமுடன் இருந்தவன். ஆனுல் இன்று பஸ்சில் ஏறிவரும் போது ஐந்தாறு இளம் பெண்கள் எழிலுடன் வந்து பஸ்சில் ஏறி என்பக்கத்து நின்ருர்கள். என்னை அறியாது என்கட்டுப் பாட்டையும் மீறி அவர்கள மேல் மனம் போக்கினேன். மனம் போக்கிய நான் ஒரு பெருமூச்சுடன் கீழ் இறங்கி வந்தேன்.

இதைச் சுவாமி உணர்ந்து கொண்டது போலும் எனக் கூறித் தான் அந்த விதமான சொல்லைக் கேட்க வேண்டிய விதம் வந்த காரியத்தைக் கூறிமுடித்தார். இன்று தம்மை அலங்கரித்துத் திரியும் பெண்கள் எத்தனை பேருக்கு இடைஞ்சல புரிவார் என்பதை உணர்வார்களா? இதற்காகவே எமது முனனோா பெண் இனத்திற்கு ஓா கட்டுப்பாடு வைத்தனர். இதனை நமது பெண் இனம் உணர வேண்டும். பதில் பெண்களைக் கூப்பிட்டு யோகாசனம் பயிற்றும் சுவாமிகளும் உணரவேண்டும். எந்தச் சுவாமிக்கும் சிநதை எந்த நேரததிலும் கட்டுப்பாட்டில் நில்லாது. எமது நாடு ஐரோப்பிய அமெரிக்க நாகரீகம் போன்று பெணகளும் ஆண்களும் வடுகாலி மாடுகள் போல் திரிபவர் அன்று. இன்று இந்த மிகக் கீழ்மையான நிலை நல்லூரா போன்ற பெருங் கோவில்களிலும் பரவுகின்றதே? நமது சைவநாகரீகததுத் தலை சிறநததொரு பெருமை பெண்கள் கட்டுப்பாட்டுடனும் ஒதுக்கமாகவும் நடநது கொள்லல். கட்டுப்பாடு புண்ணியத்தின் பாலா

கட்டுப்பாடிலாதது கருமிகள் பாவிகளின் பாலாவது. ஐயோ இன்று கைவிடபபட்ட விலங்சினம போன்து பிடவை வேண்டப்போகும். சாட்டில் பொருள்வேண்டப் போகும் சாட்டில் படம் பார்க்கும் சாட்டில் எங்கள் இளம் பெண்கள் பஸ்சிலும் கடைவீதிகளிலும் செல்கின்ற இந்த ஒரு காட்சி யாழ்ப்பாணத்து பழியும் பாவமும் கரைகாணுது பெருகிக் கொள்கின்றது என்பதற்கு தக்கசான்று. கற்புடைய மகளிர் கணவன் அல்லாத பிறா ஒருவரின் மேனி தீண்டலை ஒரு போதும் விரும்பார். கற்பின் உயர்வை உணர்ந்த பெண்கட்கு அது இயல்பாக விளங்கும்.

இன்னுமொரு அம்மையார் நமமிடம் ஒரு கதை சொன்னவர். தாமும் தனது கணவனும் திருமணமாகி சுவாமிகளை முதன் முறை தரிசிக்கப் போனுேம். போன நோரம் சுவாமிகள் என்னை நோக்கி,

### நீ ஒரு நிழல் மரம்போல வாழ் என்றேஆசிர்

வதித்தது. நான முனனுக அதன் கருத்தை விளங்கிக் கொள்ளவில்லை என்ருர். நான் சொன்னேன் அம்மா உங்கட்கு அது கிடைத்த தொருவரப் பிரசாதம் என நினையுங்கள். ஏனென்ருல் நமது சைவதர்மப்படி நீங்கள் திருமணம் செய்தது இல்லறம் பேணவாகும். இல்லறத்து உரிய சிறப்பு தருமம். ஒரு மரம் தன் இடம் வருவார் எனைவர்க்கும் இன்பம் தரும் நீழல் செய்து பழம் காய் இவை உண்ணவும் கொடுத்து ஆதரிக்கும். அதே நிலைபோன்று நீங்களும் உங்கள் சுற்றத்தை விருந்தினரை உபசரித்து அவர்களை ஆதரித்து நன்குடன் வாழும் படியாக உங்களை ஆசிர்வதித்துளார் சுவாமி எனக் கூறினேன்.

பெரியபுராணத்து சேக்கிழாரும் இதனை பாங்கில் வரும் மனை அறத்தின் பண்பு வழாமை பயிலல் என்றும் மனை அறத்தின் வேராகி விளங்கல் என்ற [illegible]. இவை பெண்கட்கு பெருஞ்சீலமாகும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனே நின்பால் நெஞ்சம் செலாவகை நேர் விலக்கும் இடும்பைகள் தீர்த்தருள்

மேலே தரப்படும் வாக்கியம் சைவ சீலத்தின் உயர்வு காண்பிக்கும் படியாக சேக்கிழார் தருகின்ற இன்னுமொரு திருவாக்காகும். இந்த திருவாக்கும் பெரிய புராணத்து திருஞான சம்பந்த சுவாமிகள் வரலாறு கூறப்படும் பகுதியில் தருவதொன்றாகும். திருநெடுங்களம் என்னும் தலத்து அமர்ந்த ஆதியான சிவபெருமானை திருஞான சம்பந்த சுவாமிகள் சென்று தரிசித்து திருப்பதிகம் பாடுகின்றார். அப்பாடலில் எம் பெருமானுக்கு செய்திடும் விண்ணப்பத்து உலகமக்கள் தமது வாழ்வின் உயர்வில் மகிழ்ந்து நிற்பது போலிலாது உயாந்த கொள்கையின் தருமம் பத்திமை தயவு புலனடக்கம் தியானம் பாவனை முதலிய நிறைவுடைய நினது அடியார் இடர்களைவாய் நெடுங்கனம் மேயவனே என மொழிந்து இறைவனை அருள் வழி நின்ற அடியார் பொருட்டு அருள் புரியுமாறு வேண்டுகின்றார்.

அவர் தமது பாடலில் அப்படி வேண்டுதல் செய்யும்போது நற்கருத்துடைய வாக்கியங்கள் நன்குடன் மொழிகின்றார். அப்பகுதிகழில் அடியார்களுடைய சீலங்கள் நன்றாக மொழியப் பெறுகின்றன. அவற்றுட் சில கீழேதருகின்றோம்.

மனத்தின் உள்ளாக அமைதியுடன் பாடல் ஆடல் பேணி இரவும் பகலும் நின்னை நினைத்து எழுகின்ம அடியார் துயர் தீர்த்தருள்க என்றும்; பொன்னடியே போற்றிக் கொண்டு நித்தலும் பூவும் நீரும் சுமக்கின்ற நின் அடியார் இடர்நீக்கு என்றும்; தலைவா நின் திருவடிக் கீழ் நிலையாகத் தொண்டு .கொண்டார் இடர்களைவாய் என்றும்; எம் பெருமான் திருவடிக்கீழாக தூய அன்புடன் வாழும் அடியார் பெருமக்கள் சீலமும் திநவும் எடுத்து போற்றி அவர்க்காக வேண்டிக் கொள்கின்றார். உண்மையாம் படி சிவனை அருளின் சீலத்தினால் ஒழுகி வணங்கி அந்தரம் ஏதும் இன்றி தத்தமது கடமையாக ஒழுகுவோர் துயர் தீரும் பொருட்டு அத்திருப்பதிகத்தை எம்பிரான் ஞானசம்பந்தன் அருள் செய்தார் என்பதை சேக்கிழார் தமது புராணத்து கூறிடும் பொழுது "நின்பால்நெஞ்சம் செலாவகை நேர்விலக்கும் இடும்பைகள் தீர்த்து அருள்செய்'' என்னும் இனிய இசையுடைய பாடல்மாலை கொண்டு பெருமானைப்போற்றினார் அவர் என்று அப்பதிகம் பாடிய வரலாற்றைக் கூறியருள்கின்றார்.

உண்மையாம் படி பெரிய புராணம் மிகவும் தூய்மை உடைய புராணம். இப்புராணத்தின் மகிமை பற்றி சொல்வதானால் எனக்கு அரிது. அல்லாது யாருக்குமே அரிது.

சிவதொண்டன் நிலையத்தில் புராணத்திற்கு பயன் சொல்லி வரும் பொழுது ஒரு நாள் பெரிய புராணம் ஆரம்பிக்கும் நாள் அன்று; யோகசுவாமிகள் என்னைக் கண்டது. கண்டதும் இன்று என்ன சிவதொண்டனில் படிக்கப் போறியள் எனக் கேட்டருளியது. நான் சொன்னேன் சுவாமி பெரிய புராணம் இன்று ஆரம்பிக்கப் போகின்றேன் என்பதாக. அப்போது சுவாமி என்னை நோக்கி ''மிகவும் நல்ல காரியம் இன்று புதன்கிழமை நான்பிறந்த நாள். பெரிய புராணம் இன்று ஆரம்பிப்பது நன்று. அத்துடன் நீ பெரியபுராணத்து முழுப்பாடலையும் பாடமாக்கிக் கொள். அடியார் குடியாக நீ வாழ் என்று அருள் செய்தார்.

அன்று எனது பேய்மனம் எல்லாவற்றையும் ஏற்றாலும் பெரிய புராணத்தை முழுவதும் பாடமாக்கு என்றதை ஏற்க மறுத்தது. ஏன் என்றால் பெரிய புராணம் பாடமாக்கினால் யாருக்கு சொல்லிக் காசு வாங்குவது. எனது அரசாங்க சேவையில் பெறக்கூடிய உயர்ச்சிக்கு இப்புராணம் முழுவதையும் பாடமாக்குவது உதவ மாட்டாதே என்ற நினைப்பு மிகுந்துள்ளது. பெரிய புராணப் பாடலை பாடமாக்காது விட்டாலும் அப்புராணத்தில் கொண்ட பற்றும் பத்திமையும் நாள் தோறும் மிகுந்து கொண்டது. இதனாலே மக்கள் விரும்பாது விட்டாலும் நான் சில இடங்களுக்குச் சென்று இப்புராணத்தை அன்புடன் ஓதி வரவேண்டுமென்ற அவா இருந்தாலும் அதனைச் துணிவுடன் செய்ய எமது உத்தியோகத்தின் மேல் கொண்ட மோகம் அப்படி துணிய முடியாத படி தடுத்தது.

இந்த வகையாக உண்மைப் பொருளுக்கு ஆளாகும் படி இலங்கை நகரம் உய்ய வந்து அவதரித்த புண்ணிய சொருபம் யோக சுவாமிகள் உணர்த்திக் காட்டிய அடியார்களை பரவிடும் தொண்டிற்கு மிலேச்ச நாகரீகத்தை வளர்க்கும் உத்தியோகத்து மோகம் இடையூறாக இருந்தது. ஆனால் எப்படி என்று எனக்கு விளங்கவில்லை நான் அரசாங்க சேவையில் நின்றும் நீக்கப்பட்டுளேன். அடுத்து வேளாண்மை செய்து பொருள் ஈட்டும் படியாய் இருந்த காணிகள் பல விற்பனைக்குள்ளாயின. நான் மேற்கொண்ட சில வியாபாரத்துறை முயற்சிகளும் சோர்வடைந்தன. இதனால் நான் இதன் மர்மம் ஒன்றும் அறியேன்! என் வாழ்வின் எல்லாத் துறைக்கும் பயன் தருவதாக கந்தபுராணம் பெரிய புராணம் இரண்டிற்கும் தொண்டு புரியும் பணி வந்துகொண்டது. இந்த ஒரு நிலை நித்தலுமோர் தயக்கத்துடன் முழுவதும திருவருளையே நோக்கி நிற்கும் படியாக வந்து கொண்டது. இந்த ஒரு நிலை நான் தேடியும் தேடாமலும் வந்து கொண்டது இப்படியான ஒரு சூழலில் பெரிய புராணம் கந்தபுராணம் தமிழ் வேதத்திருமுறைகளை நன்கு உணர்ந்து முழுவதும் திருவருள் துணைநின்று வழிகாட்ட எமது சைவசீலம் பற்றி உலகிற்கு எடுத்து உறுதியுடன் மொழிய முன் வந்துள்ளேன்.

சேக்கிழார் சொல்லுகின்ற நின்பால் நெஞ்சம் செலாவகை நேர் விலக்கும் இடும்பைகள் தீர்த்தருள் செய் என்றே அடியார் பொருட்டாக திருஞான சம்பந்தர் இறைவனை வேண்டிக் கொண்டார் என்பதையே அவரது திருநெடுங்களம் என்னும் தலத்தை அவர் பாடிய தேவாரம் நன்கு தெளிவுறக் காட்டும். இதனை திருநெடுங்களம் எனும் தலத்தமர்ந்த ஆதியான சிவனை மறையுடையாய் தோளுடையாய் எனத் தொடங்கிப் பாடிய தேவாரப் பதிகம் முழுவதிலும் காணலாம். எல்லாம் அடியார் பொருட்டு விண்ணப்பித்ததாகவே காணலாம்.

குருடன் குருடனுக்கு வழி காட்ட முடியாது. குருடன் வாயினால் பேசலாம் ஆனால் அவனை நீ ஒளியைக் கண்டாயோ எனக் கேட்டால் அவன் காணவில்லை என்று சொல்லுவான் ஆனால் அவன் குருட்டை நீக்கிக் கொண்டால் ஒளியின் உண்மை புலனாகும் இந்த ஒரு உண்மையை எம் சைவமக்கள் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். பெரும்பாலும் இந்தியாவில் உள்ள மக்கள் இதனை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில் உண்மை எது என்பதை விளங்காத மக்கள் தாம் எல்லாவற்றையும் கண்டது போல் பாடிப் பேசி விபரமறியாத எழை மக்களை மருட்டிப் பணம் பறிப் பதைப் பார்க்க வேதனையே வருகின்றது.

சிதம்பரத்திலும் சென்று பாரதப்பிரசங்கம் செய்து எல்லாரும் காண பணம் வசூலிக்கும் திட்டம் அனுப்புவித்து பணம் வசூலித்த ஒருவரை 64வது நாயனார் என்று சொன்னால் இது நாம் மேற் சொன்ன வகையில் தென் இந்தியாவில் சைவம் தனது உயர்ந்த சீலம் எல்லாம் கெட்டு கீழ் நிலை அடைந்துள்ளது என்பது வெளிப்படை. கோயில் என்ற தனிச் சிறப்புப் பெயர் கொண்ட சிதம்பரத்து அங்குள்ள மகிமை புனிதம் அத்தனையும் மறந்தே தென்இந்தியர் தமது வாழ்க்கையை நடத்த முற்படுகின்றார் என்பதற்கு இனிமேலும் வேறு சாட்சி வேண்டுமோ. சமயத்துறை என்றால் அது தென் இந்தியாவில் ஓர் வியாபாரமாகவே நடக்கின்றது. இத்தகைய பாதகச் செயல்களைக் கண்டு கொண்டும் திருக்கைலாய ஞான பரம்பரை எனக் கூறிக்கொண்டு அங்கு வடிவாகக் கொலுவீற்றிருக்கும் சுவாமிகளும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அறிவு கூடப் பெற்ற எந்த ஒரு குழந்தையும் பார்த்து பரிகசிக்கக் கூடிய செயல்கள் தருமமும் தவமும் தழைத்த தமிழ் நாட்டில் உருவெடுக்கின்றது. பொய்மையும் போலியும் ஏமாற்றும் உண்மையான சீலத்தை மூடி மறைக்க உண்மை உணர்ந்த பெரியோர் தோற்றிய நாடு இடமளிக்கின்றது என்றால் இனி சைவம் எங்கு போய்த் தஞ்சம் புகுவது.

சமரசம் பேசுவதற்கு தலையான அருட் சிறப்புடைய சிதம்பரம் இடமாக்கப்பட்டது என்றால் இனி வேறு பேச்சு என்ன. மாணிக்கவாசகர் திருக்கோவையாரிடத்து ''புரங்கடந்தான் திருவடி காண ஆசையுற்று வரங்கிடந்தான் அத்தில்லையம் பல முன்றில் அம்மாயவனே'' எனப் போற்றி நிற்ப திருஞானசம்பந்தர் சிதம்பரத்தின் எல்லைக்குள் நான் தங்கி இரேன் என்று கூறியருளியதாக பெரிய புராணம் கூற; இவையெல்லாம் பெரிதல்லாது பாட்டும் தாளமும் பேச்சும் தான் பெரிது என்று ஆயிரங்கால் மண்டபத்தில் பாரதப் பிரசங்கமும் பணம் வசூலிப்புமா நடைபெறுவது. இதை பெரியபுராணத்தை நன்கு விளங்கினீர் ஏற்பீரா? ஆகையால் புண்ணிய பூமி எனப்படும் தென் இந்தியாவில் இத்தகைய கண்ணியம் இலாத செயல் தொடங்கி வேகமாகப் பரந்து படித்தவர் மேதாவிகள் எல்லாருடைய உள்ளத்திலும் பொருளும் புகழும் இரண்டுமே மேலான பொருளாக எண்ணிக் கொள்ளும் படி வந்து கொண்டது.

ஒரு பழ மொழி ஒன்று சொல்வார்கள் அதாவது ஒரு பேயன் கரும்புத்துண்டு இதுவென்று அதே போன்ற இரும்புத் துண்டைக் கடி கடி என்று கடித்து உறுஞ்சி பல்லும் நொந்து களைப்புற்று நின்றானாம். இன்னொரு பேயனுக்கு ஓர் புத்திசாலி காசை வேண்டிக்கொண்டு ஒரு மலட்டுப் பசுவைக் கொடுத்து இந்தா இது நல்லபால் பசு மலிவாக உனக்குத் தருகிறேன். நீகொண்டு போய் இதை ஒரு இருட்டறையினுள் வைத்து பால்கறந்தால் நிறையப் பால்வரும் என்று சொல்லிக் கொடுத்தானாம். அந்த பேயனும் தன்னிடம் உள்ளகாசைக் கொடுத்து மலட்டுப் பசுவை நம்பி வாங்கிப்போய் ஏமாந்தும் புத்திசாலி சொன்னபடி இருட்டறையில் மலட்டுப் பசுவின் முலையைப் பிடித்து இழு இழு என்று இழுத்தும் பால் வராமல் முடிவில் கை அலுத்துக் களைத்தான் என்பது போலத்தான் இன்றைய நமது சைவ உலகம் உண்மை நெறி நின்ற நாயன்மாரது பாடலைக் கேட்கவோ அன்றி தாம் ஓதியோ உய்ய மனமிலாது சீல மிலாத பாட்டுக் காறர் பேச்சுக் காரர் பின்னால் திரிகின்றனர்.

திருஞானசம்பந்தப் பெருமான் பாடியருளிய தமிழ் வேதமான இந்த திருப்பதிகத்தைப் பாடினால் எத்தனையோ உய்தி அடைவர்கள். அது அல்லாது முப்பதாயிரம் நாற்பதாயிரம் ரூபா செலவழித்து 2மணித்தியாலம் வேலைப் பிடித்தது என்ன என்ன காலைப் பிடித்தது என்ன என்ன என்றும் முதல் வணக்கம் எங்கள் முருகனுக்கே என்ற வகையிலும் பாடினால் எத்தனைபேர் உய்ந்து கொண்டார்கள் என்பதை யாரும் காட்ட வல்லீரோ? பெரிய புராணத்து அடியார்களது சீலங்கள் மிகு நலமுறப் பேசப்படுகின்றது.

அத்தகைய சீலமுடைய அடியார் பெருமக்கள் துயருறுவகை கருணையால் இத்திருப்பதிகம் அருள் செய்த திருஞானசம்பந்தர்க்கு எவ்வளவு பணம் மக்களிடம் வசூலிக்கப்பட்டது? இதனை சைவ மக்களே உணர்ந்து காது குளிரக் கேட்டுச் சிரித்து மகிழ காசினை வாரி இறைக்காது திருவருள் நிலை கூட நாயன்மார் திருப்பதிகங்களை ஓதி உணர்ந்து உய்தி அடையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனிலும் இசையை விரும்பும் யாழ்ப்பாணம்

## சிவநெறியும் புத்தநெறியும் சமரசம். சமரசச்செல்விக்காக திருக் கல்யாண உற்சவம் மாறிய அற்புதம். தீர்த்தக்கரையில் செல்விக் கும் லொத்தருக்கும் சிறப்புரைக்கும் திருப்பணிச் சபை. சினிமாச் செல்வியை சீராட்டிய சிவத்தமிழ் செல்வியின் ஆலோலம்.

எம் யாழ்ப்பாணத்தில் பிரபல இசையாளர்க்கு உள்ள மதிப்பு கடவுளுக்குக் கூட இல்லை. என்பது சமூககால நிகழ்ச்சிகள் பற்றி தெரிய வருகின்றது. தெய்வமும் மனிதனால் ஆக்கப்பட்டதுவே என்பது துணிவாக இன்று கொள்கின்றனர். கண்டத்தின் இனிமைக்கும் வாத்தியங்களின் இனிமைக்குமே மக்கள் முதலிடங் கொடுக்கின்றனர். இறைவனுக்குச் செய்யும் நித்திய நைமித்திய கருமங்களில் தாம் விரும்பியவாறு மாற்றியமைக்க மக்கள் முனைந்து கொள்கின்றனர். இதனால் வைதிக நெறிக்கு இனி இடமென்பது இல்லாமல் வந்து கொண்டது.

கண்டத்தின் இனிமையும் கருவியின் இனிமையும் கடவுட்தன்மை அன்று என விளங்குவார் இல்லை. இசைப் பாடல்கள் எத்தனையோ உள. அவைகள் யாவும் கண்டத்தின் இனிமையாலும் யாழ் மத்தளம் கடம் மோர்சிங் வீணை முதலிய பல்வேறு வாத்தியங்களின் கூட்டிசைப்பின் இனிமையாலும் இசையை செவிகுளிரும் படி கேட்கவைப்பன. இப்படியான இசையை மக்கள் கேட்டு மகிழ்வார். இவை திரும்பத்திரும்ப கேட்க கேட்க அலுக்காது. இதற்கு சான்று எமது வானொலியில் ஐம்பதாயிரம் தடவை ஒரு பாடல் திரும்பத்திரும்ப போட்டாலும் கேட்போர் கேட்டு அலுக்கார்கள். வானொலியாரும் போட்டுச் சலிக்கார்கள். அதுமட்டோ ஒவ்வொர் பாடலிற்கும் விமரிசனமும் மூச்சுத்திணறச் சொல்லியும் களைக்கார்கள்! ஐயோ அதை நாம் என்னென்று வர்ணிப்பது: வேத நெறிக்குரிய அந்தணர்கள் இல்லங்களே வானொலி நிலையத்தாரின் உப நிலையமாகி அயலவர்க்கு நாங்களும் இதைத்தான் விரும்புவோம் எனக்காட்ட உச்சத்தொனியில் வானொலிப் பெட்டியை இரவு பகல் என்ற காலவேறு பாடின்றி இயங்கவைப்பார் என்றால் இனியும் எமது இன்றைய இசையின் மகத்துவத்தைப் பேச வேறுசாட்சியும் வேண்டுமோ?

ஐயர் நீராடி ஏதோ ஆன்மார்த்தம் என்று அறையினுள் பிரவேசித்தாலும் ஐயோ அவரது வானொலிப் பெட்டி தனது பரார்த்தத்தை அயலவரும் கேட்டுமகிழவடிவாகச் செய்யும். இதை நன்கு பாராட்டாமல் இருக்கலாமோ? சீர்காழியினது ஒரு பிடி; கே. பீ யினது ஒரு சுருள்; அதனுடன் ஒரு அசைப்பு: அப்பாடா சினிமா பாடகர்பாடகிகளின் இணையும் இசை அணையும் மொழிகள்; அப்பாடா இத்தனை இசையின் மகிமையுடன் பொப்பிசையின் உச்சத்தில் எழுந்து மிச்சத்தைக் குறுக்கி சுருட்டி உருட்டிடும் சிறப்புகளை என் சொல்லலாம். இன்றைய இசை உலகே உலகு: நான் சிலவேளை நினைக்கின்றது ஐயோ எவ்வளவு புண்ணியம் செய்தது இன்றைய மனிதகுலம். இருந்த இடத்தில் எல்லாவிதமான இசையையும் கேட்க வைத்துளரே எமது வானொலி நிலையத்தார். அதுவும் சொற்ப நேர தேனீர் இடைவேளை தவிர மற்ற நேரமெல்லாம் ஒரே வாட்டுதல் தான். இதனாலே தேனீர் கடைகளுக்கு வாய்ப்பு. அங்கு தேனீர் குடிக்க போவாரும் வடை தோசை இடியப்பம் இட்டலி சுண்டல் இவற்றுடன் சம்பல் தொடும் பொழுது தாளத் தோடே தலையசைப் போடே தொடலாம். சுகமாக இருக்கும். அடுத்து நாவிதன் கடையில் சேவ் குறொப் எடுப்பார் பாடு வாய்ப்பு. லோன்றிக் காரன் பாடு பெரும் பிழைப்பு: இப்படியான பெருவாய்ப்பை நம்மவர் பெற்றுக் கொள்ள நமது மூதாதையர் பாவங்கள் ஒருபாட்டுக் கூடக் கேட்டிராயினமே. ஒருகால் இனி வந்து பிறந்து கேட்பாரோ. எனக்குத் தெரியாது.

இந்த இசை விலைக்குள் அடங்கியதாக அதாவது வியாபாரமாக இன்று பரவிக் கொண்டது. அதாவது இனிய பாடகர் அல்லது பாடகி இசைக் கருவிகளுடன் பாடினால் அவருடைய கண்டத்து இனிமையும் இசையினைப் பெருக்கும் கருவியின் இனிமையும் இரண்டும் இணைந்த போது அது உலகில் மிக்கதொரு மதிப்பை விலாசத்தைத் தேடித் தரும். அப்பொழுது. அந்த விலாசம் எழும்ப எழும்ப காசும் (றேட்டும்) கூடிக் கூடிக் கடவுள் என்ற நிலைக்கும் மிகுந்து அப்பாடா அந்த இசையாளரின் உயர்விற்கு நாம் எல்லை காணமுடியாது.

இசைக்கலை தெய்வீகம் என்று மேடையில் முழங்குவார் எமது இசை வளர்க்கும் செல்வர்கள். ஆனால் தெய்வீகத்தில் பணம் முதலிடம் பெறலாமோ? அது சரியோ எனக்குத் தெரியாது. தெய்வீகக் கலைக்கும் பணத்திற்கும் ஏதும் தொடர்பு இருக்காதே! அல்லது புகழ் கூட இருக்காதே! கலையை நாம் விலை பேசி விற்பதா! இதுதானா தெய்வக் கலையின் மாண்பு? கலையின் சிறப்பில் கடவுட் தன்மை காண்பதென்றால் அதில் காசு கலப்பது பாதகமென்பதை விளங்காதா?

இன்று எமது யாழ்ப்பாணத்தில் கலைக்கு விலை பல பதினாயிரமாக எண்ணிச் செலவழிக்கப்படுகின்றது. உண்மை விளைவின் உணர்வுடையார் இதனை நோக்கினால் இது யாழ்ப்பாண மக்களின் அறிவுக்குறைவையும் இங்கு பல பதினாயிரக் கணக்கில் தமது பாடலிற்காகக் காசு தட்டிக் கொண்டு போகின்ற பாடகர் பாடகிகளின் புத்தித்திறனையும் காண்பிக்கின்றது. நேர்மையற்ற தகாத வழிகளால் தமது பாடலிற்கு பெறும் பணத்தையும் கொண்டு போகின்றனர் இன்றைய இசையாளர். இந்த இசை வல்லுனருடைய நேர்மை அற்ற முறைச் செயலை நாம் அவதானிக்கும் போது உங்கள் யாவருக்கும் துணிந்து சொல்வேன் அவருடைய வழி உங்கட்கு நன்மை தருவதல்ல. நஞ்சில் அமுதம் கலந்தாலும் நஞ்சு தன் தொழிலைச் செய்யாது விடாது. ஆகவே முதல் நஞ்சினை நீக்கி நல்ல அமுதத்தைப் பருகுதல் மிகவும் நன்று.

எமது அயலில் உள்ள பிள்ளையார் கோவில் ஒன்றில் குருக்கள் உட்பட வேறுபலருமாகச் சேர்ந்து சென்ற முறை அக்கோவிலில் ஓர் வைரவ பொங்கலில் முழுக்க முழுக்க சினிமாப் பாடல் போட்டே தமது பொங்கலை நிரப்பினார்கள். குருக்கள் மிகத் தாராளமாக மது அருந்தும் அந்தப் பெரியோர் மத்தியிலே மிகு கம்பீரமுடன் நின்று தானும் அந்த ஒலிபெருக்கியில் விமரிசனம் செய்வார். இந்த கோயில் திருப்பணிச் சபை மக்கள் அவர்க்கு தகாத முறையால் தீட்சை வைத்தும் கூட அன்று பின்னேரமே அது எல்லாம் சரி குழந்தைப் பொடியள் முசுப்பாத்தியாகச் செய்து விட்டது பொறுத்துக் கொள்ளுங்கள் என வேண்ட சரி கோபம் தணிந்தேன் பிள்ளையார் பிழை பொறுப்பார் என்று குருக்கள் சொல்லி மன்னிப்புக் கொடுத்தவர். அதன் பின் சேட்டா பலசரக்கு வட்டி வாய்ப்பன் முட்டை முதலிய வியாபாரத்தால் மிகைப்பட்ட பொருள் திரட்டியோர் திருப்பணி செய்ய அக்கோவிலில் சினிமா இசை நிகழ்கின்றது. பணம் படைத்தார் எதுவும் செய்யலாம். அவர்கள் விரும்பியது தான் இசைக்கலை நெறி என்றதே இன்றைய சைவ உலகம். இனிமேல் வேறாக ஆகமங்கள் என்றது தேள்வை இல்லை. ஏனெனில் ஆகம நெறியை வளர்க்க வேண்டிய அந்தணர் குலமே இன்று இத்தகைய சினிமாக்கலையை ஏதும் ஒரு நெறியிலாத வெற்றுப் பாடலை கோவிலில் போடுவது சிறப்பு அது செய்யலாம் நாமும் கூடத் தான் என்று முன்னின்று நடத்தும் போது நாம் அது தவறு என்று சொன்னால் ஊர்மக்கள் என்னை மிக்கதொரு சேவலமாகவே நினைப்பர்.

கோவில் குருக்கள் சரி என்று சொல்லும் போது இவருக்கென்ன என்ற வகை தானே அவரது உள்ளம் நினைந்து கொள்ளும். இந்த வகையாக அன்று அந்தக் கோவில் ஒலி பெருக்கி சினிமா பாடல் பாட திருப்பணிச் சபையார் சிலரும் சில இளைஞரும் குருக்களும் நம்மையும் நம்பணியையும் வசை மாரி பாடிய வரலாறும் உண்டு. அதைப் பற்றி நமக்கு ஏதும் அக்கறை இல்லை. இன்றைய உலகில் இப்படி எல்லாம் நடப்பது சரி இல்லை என்பதைச் சொல்வது எனது தொண்டாகின்றதே ஒழிய மேற் கொண்டு யாருடனும் பகைக்கவோ அல்லது அவமானப் படுத்தவோ விரும்பவில்லை.

இந்தவகையாக நாம் சில காரணங்களை எடுத்துக் காட்டு கின்ற போது யாருடனும் தனிப்பட்ட கோபத்தை சாதிக்கின்றேன் என நினைக்க வேண்டாம். இந்த வகை தனிப்பட்ட கோபத்தை நான் சாதித்து நான் என்ன பயன் பெறப் போகின்றேன்? என் மீது இந்த வகை பழி சுமத்தும் அன்பர்கள் தெளிந்து கொள்ளவும். கோவில் என்றது நமது வழிபாட்டால் தொண்டால் நாம் தூய்மை அடையக் கொள்ளும் இடமே அன்றி சினிமாக் கலையை இசைக் கலையை வளர்ப்பதற்குரிய இடமன்று என்பதே எமது கொள்கை.

கலையை வளர்க்க வேண்டாம் என்று சொல்லவில்லை. அதற்கு ஓர் இடமுண்டு. கலையை வளர்க்க விரும்புவார் கலை வளர்க்கும் மண்டபங்களைக் கட்டி அதன் மூலம் தமது எந்த வகையான கலையையும் வளர்க்கலாம். நாம் அதனை மிகு தாராளமாக வரவேற்கிறோம். அங்கு தான் அரங்குகள் (மேடைகள்) அமைக்க விதியுண்டு. அதை விடுத்து கோவிலில் அரங்கு அமைத்து பாடும் படியும் பேசும் படியும் எமது முன்னை நாதாக்கள் சொல்லவே இல்லை. இன்றைய கோவில் நிகழ்ச்சிகளில் கலை நிகழ்ச்சி இசை நிகழ்ச்சி நடைபெறுவதை நோக்க உண்மையாம் படி வேதனையாக இருக்கிறது. எமது யாழ்ப்பாண மக்களில் சைவசீலத்தை உணர்ந்த பெரியோர் இங்கு சிலர் இருக்கின்றார்கள். இந்தியாவில் அது இல்லை என்ற அளவிற்கு அங்கு நடந்து கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சிகளால் தெரிய வருகின்றது. ஆகவே உங்களுக்கு கோடி புண்ணியம் உண்டு கோவிலை கோவிலாம் படி இருக்க வழி செய்யுங்கள். உங்களது சிறிய அற்பத்தனமான செய்கைகளால் நீங்கள் செய்யும் திருப்பணியின் புண்ணியத்தையும் பாழாக்காதீர்.

புத்தர் பிரானே நின் என்று சினிமாவில் போற்றிப்பாடி பின்னர் சங்கரன் கும்பிடும் தம்பிரானே எனவும் வசதிக்கேற்ற படி பாடும் ஒரு சினிமா நடிகைப் பெண்ணை தேவ உலகத்தால் வந்த கன்னிகையாக மதித்துக் கொண்டு மாவிட்டபுரம் கோவிலில் நடைபெறவேண்டிய ஆகமவழியான கிரியைகளை மாற்றியமைக்க முன் வந்தது எமது சைவ உலகம் என்றால் இசையில் எம் மக்கள் கொள்ளும் அக்கறை எவ்வளவு என்பதை நாம் உணராதிருக்க முடியுமோ? இதுவல்லவோ வைதிகநெறி! மக்கள் விரும்பிய நெறி! கோவில் முன் மண்டபச் சுவரில் வேதாகம நெறிப்படி இக்கோவில் நடைபெறும் என்றும் எழுதி வைத்துள்ளார்களே! நன்று நன்று எழுதிவைத்தும் இச்செயல்

இதுமட்டன்றி இந்த சினிமா நடிகையான பாடகி இப்பொழுதுதிருநீற்றுப் பை கொண்டு வந்து பாடியவுடன் சிவத்தமிழ் செல்வி சென்று பாராட்டி பொன்னாடை போர்த்தாவே! இப்படியாக தமது சிவத்தமிழ் சினிமா தமிழையும் போற்றும் மரபுடையேன் என்று சிவத்தமிழ் செல்வி நிரூபித்துக் காட்டி விட்டாவே! இதுவா சிவத்தமிழ்?

மொட்டைக் கடித குருக்கள்மாரே சிவத்தமிழ் செல்விக்காகப் பரிந்து எனக்கு வடை மாலை போட ஆயத்தமானீரே! நான் இலங்கை நகர் செய்த பாவம் என்று நக்கல் பண்ணி எழுதிநீரே! இன்று உமது ஆகமங்கள் எங்கே? சிவத்தமிழ் எங்கே? சிவத்தமிழ் சினிமாத் தமிழாயதே! இதற்கு என்ன சொல்வீர்? இது எழுதியதற்கு வடைமாலையை விட்டு வாய்ப்பன் மாலையோ போடுவீர்? ஆகமநெறியை மாற்றலாம் என்று சிவத்தமிழும் ஏற்றுக்கொண்டதே? உமது இன்பத்துறைகட்கு வடையும் வாய்ப்பனும் வேண்டியது தான்.

கூத்தினர் தன்மை வேறு கோலம் வேறு என்பதை இனியாகிலும் குருக்கள் மாரே தெளிவீரோ? இனியாகிலும் உங்களது தாய் தந்தையர் ஒழுகிக் காட்டிச் சென்ற வைதீக நெறியைக் கடைப்பிடிப்பீரோ? இதோ திருவருள் எல்லாவற்றையும் உமது கண் முன் காட்டவும் தெளியுங்கள்! ஒரு போதும் உங்களுக்கு நிழல் தரவந்த குடையை பேய்த்தனமான நெறியுடையோருக்காக கிழித்தெறிய முற்படாதீர்.

யார் எப்படி நடந்தாலும் எனக்கு ஒன்றும் பழுதாவதில்லை. நம்மை நன்மையாம் படி இப்பிறவியில் வைத்துக்கொள்ள இதுவே வழி என்று முன்னைப் பெரியோர் சில ஒழுங்குகளைக் கடைப்பிடித்து ஒழுகிக் காட்டி நற்பயன் அடைந்தனர். அந்த வழியைப் பின்பற்றல் ஆருக்கும் நன்மையே!

---

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கு உயரப்புலத்தில் இருக்கும் இலங்கை மணி சைவநூற் பதிப்பகத்தின் சார்பில் அதன் உரிமையாளர் திரு. [illegible] அவர்களால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org